**விவசாய மற்றும் பெருந்தோட்டத்துறை அமைச்சு**

# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

## தேயிலை ஆராய்ச்சி சபை

## பணிப்பாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி பதவி

தலவாக்கலையிலுள்ள இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் மேலேயுள்ள பதவிக்காக தேவையான தகைமைகளையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பணி விளக்கம்:**

நிலையத்தின் அனைத்து ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் நிருவாக மற்றும் நிதியியல் சார்ந்த விடயங்களுக்கு பொறுப்பாகவிருப்பதுடன் நிலையத்தின் பதவிக் குழுவிற்கு தலைமைத்துவத்தையும் ஊக்கத்தையும் வழங்கல்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

**வெளிவாரி:**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து விஞ்ஞானம்/விவசாயம் அல்லது பொறியியலில் துறையில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு மேல் பிரிவுடன் நான்கு (04) வருட விஷேட பட்டம் அத்துடன் உரித்தான கற்கைநெறியொன்றில் பெற்ற முனைவர் பட்டமொன்று.

அத்துடன்

அங்கீகரிக்கப்பட்ட அமைப்பொன்றில் நிருவாக மட்டம் மற்றும் முகாமைத்துவ அனுபவத்துடன் ஆகக் குறைந்தது இருபது (20) வருட ஆராய்ச்சி அனுபவத்தில் பன்னிரண்டு (12) வருடங்கள் முனைவர் பட்டத்தைப் பெற்ற பின்னரும் ஐந்து (05) வருடங்கள் சிரேஷ்ட நிருவாக மட்டத்திலும் அத்துடன் நிரூபிக்கப்பட்ட முன்னைய பணி அனுபவம்.

அத்துடன்

ஆராய்ச்சி விஞ்ஞானிகள் / விரிவாக்கல் உத்தியோகஸ்தர்கள் பல்வகை கற்கைநெறிகளை தலைமைதாங்கல் மற்றும் நேரான வழியில் இட்டுச் செல்வதற்கான நிரூபிக்கப்பட்ட இயலுமை. முறையான நிலையெடுத்தல் மற்றும் மனித மற்றும் ஏனைய வளங்களின் வினைத்திறமையுடனான முகாமைத்துவமானது மேலதிக தகைமையாக கருதப்படும்.

**உள்வாரி:**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து இரண்டாம் வகுப்பு விஞ்ஞானம்/ விவசாயம் அல்லது பொறியியலில் நான்கு (04) வருட விஷேட பட்டம் அத்துடன் இயைவுடைய கற்கை நெறியொன்றில் பெற்ற முனைவர் பட்டம் அத்துடன் தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் மேலதிக பணிப்பாளரொருவராக மூன்று (03) வருட திருப்திகரமான சேவை அல்லது ஆராய்ச்சி/ விரிவாக்கல் பிரதி பணிப்பாளராக ஐந்து (05) வருட சேவை அல்லது பிரிவின் தலைவராக/ முதன்மையான ஆராய்ச்சி அலுவலராக/ முதன்மையான ஆலோசனை அலுவலராக எட்டு (08) வருடசேவை.

அல்லது

விஞ்ஞானம் / விவசாயத்தில் அல்லது பொறியியலில் பெற்ற பட்டமொன்று அத்துடன் இரு (02) வருட பட்டப்பின் பட்ட ஆராய்ச்சி பட்டம் அத்துடன் உரித்தான கற்கைநெறியில் பெற்ற முனைவர் பட்டம் அத்துடன் தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் மேலதிக பணிப்பாளராக மூன்று (03) வருட திருப்திகரமான சேவை அல்லது ஆராய்ச்சி/ விரிவாக்கல் பிரதிப் பணிப்பாளராக ஐந்து (05) வருட திருப்திகரமான சேவை அல்லது பிரிவின் தலைவராக/ முதன்மையான ஆராய்ச்சி அலுவலராக/ முதன்மையான ஆலோசனை அலுவலராக எட்டு (08) வருட சேவை.

அத்துடன்

ஆராய்ச்சி விஞ்ஞானிகள் / விரிவாக்கல் உத்தியோகஸ்தர்கள் பல்வகை கற்கைநெறிகளை தலைமை தாங்கல் மற்றும் நேரான வழியில் இட்டுச் செல்வதற்கான நிரூபிக்கப்பட்ட இயலுமை. முறையான நிலையெடுத்தல் மற்றும் மனித மற்றும் ஏனைய வளங்களின் வினைத்திறமையுடனான முகாமைத்துவமானது மேலதிக தகைமையாக கருதப்படும்.

**சம்பள அளவுத்திட்டம்:**

HM 2-3 (2016) மாதாந்தம் 98,215 – 12 x 2,700 - 130,615 ரூபா.

**வயது:**

40 வயதிற்கு குறையாமலும் 50 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு மேல் வயதெல்லை பிரயோகிக்கப்படமாட்டாது.

தெரிவுசெய்தல் முறைமை: கட்டமைப்பான நேர்முகப் பரீட்சையொன்றின் மூலமாக மேற்கொள்ளப்படும்.

**ஏனைய அனுகூலங்கள்:**

i. தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தில் முழுமையான வசதியமைப்பைக் கொண்ட விடுதி.

ii. நிலையத்தின் தற்போது அமுலிலுள்ள சட்டங்களுக்கமைவான மருத்துவ அனுகூலங்கள்.

iii. சேமலாப நிதியம்: தெரிவு செய்யப்பட்ட அபேட்சகரானவர் சம்பளத்தின் 10% ஐ பதவி அலுவலர்களுக்கான சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுவார். அதேவேளையில் நிலையமானது 15% ஐ பங்களிப்புச் செய்யும். மேலும் நிலையமானது 3% ஐயும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்பு செய்யும்.

iv. வீட்டு வேலைகளுக்காக நான்கு தொழிலாளர் தொகுதிகள். (உள்வேலைகளுக்காக இருவர் மற்றும் வெளிவேலைகளுக்காக இருவர்)

v. தற்போது அமுலிலுள்ள அரசாங்க ஒழுங்குவிதிகளுக்கமைவாக சாதாரணமான கொடுப்பனவில் வரையறுக்கப்பட்ட பிரத்தியேக பாவனைக்காக தொழில் நியமனம் செய்பவரின் விருப்புரிமையில் வாகனமொன்று.

vi. பதவிக்கு இயைபுடைய ஏனைய மேலதிக அனுகூலங்கள்.

இப் பதவியானது நிரந்தரமானது. கீழே கையொப்பமிட்டவருக்கு கிடைக்கும் வகையில் **2024 ஜூலை 31 ஆம் திகதியன்று** அல்லது அதற்கு முன்னராக பதிவுத் தபாலில் விண்ணப்பத்துடன் முழுமையான **சுயதரவு** அத்துடன் பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று, உரித்தான கல்விசார் மற்றும் ஏனைய தொழில்சார் தகைமைகள் மற்றும் சேவை சான்றிதழ்களின் பிரதிகள், அத்துடன் உரித்தான துறையில் விண்ணப்பதாரியின் திறன்கள் மற்றும் அறிவு ஆகியவற்றை மதிப்பீடு செய்வதற்காக உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் ஆகியவற்றையும் அனுப்புதல் வேண்டும்.

அரச சேவை/கூட்டுத்தாபனங்கள்/நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பங்கள் உரித்தான நிறுவன தலைவரூடாகவே அனுப்பப்படல் வேண்டும். இந்த தேவைப்பாட்டின் இணக்கமின்மையானது விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கான வழியை வகுக்கும். அத்துடன், விண்ணப்பிக்கும் பதவியை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

தகவலுக்காக தயவு செய்து தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் **www.tri.lk** என்ற இணையதளத்தை பார்வையிடவும்.

**தலைவர்,**
**தேயிலை ஆராய்ச்சி சபை,**
**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்,**
**சென் கூம்ஸ், தலவாக்கலை.**